**உடபலாத்த பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடபலாத்த பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உடபலாத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டில், என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் கைத்தொழில் கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகள்ரூபா 423,938 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | 2022 ஆண்டு இறுதி கணக்குகளில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கைத்தொழில் கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியல் ரூபா 1,031,425 ஆன பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி குறைவாகவும், நிலையான வைப்பு முதலீட்டு மீதி கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டு இறுதிக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதென. | பெற வேண்டிய வட்டி மற்றும் முதலீடு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 04 கணக்கு விடயத்திற்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் அட்டவணைகளின் மீதிகளிற்கிடையில் ரூபா 10,157,112 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | 2022 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுவதென. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகளில் குறிப்பிடப்படும் மீதிகளிற்கிடையிலான வித்தியாசங்களை சரி செய்ய வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 571 | 2012 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை 13 சந்தர்ப்பங்களுக்கு உரிய ரூபா 523,030 ஆன காலாவதியான வேலை வைப்புக்கள், தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிமாணம் பிரகாரம் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 33,000,479 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 29,614,163ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வீதவரி வருமானம் ரூபா 2,352,829 தொகை அறவிடப்பட்டு இருக்காததுடன், அம்மீதியினுள் ஒரு அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 99வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 862,593 உம், ஒரு அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 05 ஆண்டுகளை விஞ்சிய 79 வீதவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 709,986 உம், வாடிக்கையாளர்களின் பெயர்கள் வீதவரி பதிவேட்டில் குறிப்பிடப்படாது ‘‘உரிமையாளர்’’ என மாத்திரம் குறிப்பிட்டுள்ள 34 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 86,862 உம், 26 அரச நிறுவனங்களிலிருந்து அவிட வேண்டிய ரூபா 59,431 உம் உள்ளடங்கியிருந்தன. | நிலுவை வீதவரி தொகையிலிருந்து ஒரு பகுதி அறவிட்டுள்ளதுடன், எஞ்சிய நிலுவையை அறவிட குறித்த கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதென. | நிலுவை வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீர் குத்தகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிலுவை நீர் கட்டணம் ரூபா 3,095,924 தொகை அறவிடப்பட்டிருக்காதுதுடன், அம்மீதியினுள் ஒரு அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 171 வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,230,891 மற்றும் ஒரு அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 05 ஆண்டுகளை விஞ்சிய 165 நிலுவை நீர் கட்டண வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,199,099 உம் உள்ளடங்கியிருந்தன. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட துண்டிப்பு கட்டளை அனுப்பப்பட்டுள்ளதுடன், அறவிட முடியாத மீதியை சபை அங்கீகாரத்தின் மீது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டு. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வாடகை<br>கடையறை வாடகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிலுவை கடையறை வாடகைரூபா 2,979,594 தொகை அறவிடப்பட்டு இருக்காததுடன், அம்மீதியினுள் ஒரு அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 66 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,842,130 மற்றும் ஒரு அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 05 ஆண்டுகளை விஞ்சிய 37 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,138,578 தொகை உள்ளடங்கியிருந்தன. | புஸ்ஸெல்லாவ உப அலுவலகத்தின் நிலுவை வருமானத்தை இனங்காணுவதில் பிரச்சினையொன்று காணப்படுவதுடன், ஏனைய நிலுவை தொகையிலிருந்துஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன்,எஞ்சிய தொகையை அறவிடவதென. | நிலுவை கடையறை வாடைகை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும. |
| (ii) | 2014 ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிலவி வரும் அறவிட வேண்டிய பழைய கடையறை வாடகை நிலுவை ரூபா 383,059 ஆனதுடன், அம் மீதியை அறவிட போதிய செயற்பாடுகள் எடுத்திருக்கவில்லை. | விரிவான தகவல்களை கண்டறிவதன் இயலாமையின் மீது அறவிட முடியாமல் இருப்பதென. | நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிகக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வீட்டு வாடகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 200,934 வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக நிலவி வரும் மீதி ஒன்றாவதுடன், அறவிடுவதற்காக தகவல்களை சேகரித்துக் கொண்டிருப்பதென. | நிலுவை வீட்டு வாடகையை அறவிட வேண்டும். |
| (உ) | அறிவித்தல் பலகை கட்டணம். | | |
| | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் நிலுவை அறிவித்தல் பலகை கட்டணம் ரூபா 3,436,900 அறவிடப்பட்டிருக்காததுடன், அம்மீதியினுள் ஒரு அறிவித்தல் பலகையின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 43வியாபாரங்களின் அறிவித்தல் பலகைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 3,430,300 உள்ளடங்கியிருந்தன. | அறவிடுவதற்காக வழக்கு தாக்கல் செய்தல், நினைவூட்டல் அனுப்புதல், கணிப்பீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் | நிலுவை அறிவித்தல் பலகை கட்டணத்தை அறவிட வேண்டும். |
| (ஊ) | முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணம் | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளரூபா 865,200 ஆன முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், | கொரோனா தெற்று நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, நிலுவையை வருட நடு வரை | நிலுவை முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட வேண்டும். |

| | |
|---|---|
| அம்மீதியினுள் அலகொன்றின் நிலுவை ரூபா 2,000 இற்கு அதிகமான 105 முச்சக்கர வண்டிகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 446,400 உள்ளடங்கியிருந்தன. | காட்டுவதுடன், எதிர்காலத்தில் கணிப்பீட்டு நடவடிக்கை மேற்கொண்டு நிலுவை தொகையைஅறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) பெற வேண்டிய கணக்குகள் | | |
| மீளாய்வாண்டு இறுதியில் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த கூட்டுத்தொகை ரூபா 5,449,835 ஆன கிடைக் வேண்டிய கணக்கு மீதிகளை அறவிட்டிருக்கவில்லை. | ஒரு பகுதியை அறவிட்டதுடன்,மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளை அறவிட வேண்டும். |
| (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| மீளாய்வாண்டு இறுதியில் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளிற்கிடையிலான வீச்சளவை விஞ்சியிருந்த கூட்டுத்தொகை ரூபா 846,053 ஆன செலுத்த வேண்டிய மீதியை தீர்த்திருக்கவில்லை. | ஒரு பகுதி தீர்க்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 7,396,495 ஆனமோட்டார் வண்டியொன்று, டெக்டர் வண்டியொன்று மற்றும் 02 துவிச்சக்கர வண்டிகள் 2019 முதல் 2021 இடையிலான காலத்தினுள் திருத்த வேலைகளிற்காக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ருந்த போதும்,திருத்தவேலைகள் பூர்த்தி செய்யப்படாது விளைவற்று காணப்பட்டன. | உரிமையை சுவீகரிக்க மற்றும் திருத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதென. | திருத்த முடியமான மோடார் வாகனங்களை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகார ஆளணியின் 14 பதவிகளில் 27 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | தற்காலிகமாக ஆட்சேர்ப்பை இடைநிறுத்துமாறு அறிவித்துள்ளதன் மீது வெற்றிடங்கள் நிலவுவதுடன், வெற்றிடங்களுக்காக தின அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்கப்பட்டுள்ளதென. | முக்கிய ஊழியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும். |